**அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.**

**பசலி 1432 திருக்கோயில் மூலம் பஞ்சாமிர்தம் தயார் செய்து விற்பனை செய்ய தேவையான தோல் உரிக்கப்பட்ட பூவன் வாழைப்பழங்கள் சப்ளை செய்வதற்கு டெண்டர் விளம்பர அறிவிப்பு மற்றும் நிபந்தனைகள்**

**ந.எண். 13185/1432/சி4–1. நாள்.11.6.2022**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் பசலி 1432க்கு (01.07.2022 முதல் 30.06.2023 வரை) ஒரு வருட காலத்திற்கு திருக்கோயில் மூலம் பஞ்சாமிர்தம் தயார் செய்ய தேவையான தோல் உரிக்கப்பட்ட பூவன் வாழைப்பழங்கள் சப்ளை செய்வதற்கு டெண்டர் பின்வரும் விபரப்படி நடைபெறும்

| | | |
|---|---|---|
| 1. | டெண்டர் படிவத்தின் விலை | ரூ.500/– (திரும்பப் பெறத்தக்கதல்ல)<br>பதிவிறக்கம் செய்பவர்கள் ரூ.500/–க்கு வரைவோலை இணைக்க வேண்டும். |
| 2. | டெண்டர் டெபாசிட் தொகை | ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம்) |
| 3. | டெண்டர் படிவம் வழங்கப்படும் நாள் | 12.07.2022 முதல் 28.07.2022 மாலை 5.00 மணி வரை (அலுவலக வேலை நாட்கள் மட்டும்) |
| 4. | டெண்டர் கொடுக்ககடைசி நாள் / நேரம் | 29 .07.2022 பிற்பகல் 01.00 மணி |
| 5. | டெண்டர் திறப்பு நடைபெறும் நாள் | 29.07.2022 பிற்பகல் 03.00 மணிக்கு |
| 6. | டெண்டர் நடைபெறும் இடம் | திருக்கோயில் பெருந்திட்ட வளாகத்தில் உள்ள மாரியம்மன் மண்டபத்தில் முதல் தளத்தில் நடைபெறும். |

**ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்**

1. ஒப்பந்தப்புள்ளிதாரர் அல்லது நிறுவனம் இந்து மதத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.
2. திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடுத்தவர்களோ, திருக்கோயிலுக்கு எவ்வகையிலேனும் பாக்கி செலுத்த வேண்டியிருப்பவர்களோ, திருக்கோயில் நலனுக்கு எதிராக செயல்பட்டவர்களோ நீதிமன்றத்தில் தண்டனை அடைந்தவர்களோ, இளவர்களோ, (Minor) ஒப்பந்தப்புள்ளி கொடுக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
3. திருக்கோயில் நலனுக்கெதிராக செயல்படுவபவர்கள் திருக்கோயிலுக்குச் செலுத்த வேண்டிய குத்தகை பாக்கி, பல்வகை உரிமக் கட்டணம் நிலுவை வைத்துள்ளவர்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளை பசலி காலம் முடிய பூர்த்தி செய்யாதவர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப் படமாட்டார்கள்.
4. மது அல்லது லாகிரி வஸ்துகள் அருந்தியவர்கள் ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

5. திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் திருக்கோயில் மூலம் பஞ்சாமிர்தம் செய்து விற்பனை செய்ய தேவையான தோல் உரிக்கப்பட்ட பூவன் வாழைப்பழங்கள் சப்ளை செய்வதற்கான டெண்டர் திறப்பில் கலந்து கொள்பவர்கள்ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையாக ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும் ) இணை ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம் என்ற பதவி பெயருக்கு சமயபுரத்தில் மாற்றத்தக்க வகையில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கி வரைவோலையினை ஒப்பந்தப்புள்ளியுடன் வைத்து இணைக்க வேண்டும். வங்கி வரைவோலை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ரொக்கம் கண்டிப்பாக ஏற்கொள்ளப்பட மாட்டாது.
6. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர் நிரந்தர கணக்கு எண் அட்டையின் (Pan Card & GST) நகல் மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி, சிறு தொழில் முனைவோருக்கான சான்று நகல் (MSME) எண் ஒப்பந்தப்புள்ளியுடன் வைத்து கண்டிப்பாக இணைக்க வேண்டும். அவ்வாறு இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
7. ஒப்பந்தப்புள்ளி திறப்பு நேரம், தேதி மற்றும் நிபந்தனைகளை எந்த நேரத்திலும் மாற்றியமைக்கவோ, ரத்து செய்யவோ அல்லது புதிதாக சேர்க்கவோ, இணை ஆணையர் / செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு. அதனை ஆட்சேபிக்கும் உரிமை ஒப்பந்ததாரருக்கு கிடையாது.
8. பொது ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்ள வந்தவர்கள் நியாயமான தொகைக்கு டெண்டர் கேட்கவில்லை என்று திருக்கோயில் நிர்வாகம் கருதினால் பொது டெண்டர் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கவும், எக்காரணமும் காட்டாது டெண்டரை உடனடியாக ரத்து செய்து, மறு டெண்டர் விடவும், டெண்டர் தொகையினை பறிமுதல் செய்யவும், திருக்கோயில் நிர்வாகத்திற்கு முழு உரிமை உண்டு. இதை ஆட்சேபிக்க யாருக்கும் உரிமை கிடையாது.
9. ஒப்பந்ததாரர் பெயரில் வாழைப்பழம் வியாபாரம் செய்து வருவதற்கு நடப்பு காலத்தில் செல்லத்தக்க வகையில் வணிகவரித்துறையில் பதிவு செய்ததற்கான பதிவு சான்றிதழ் நகல் ஒப்பந்தப்புள்ளியுடன் வைத்து இணைக்க வேண்டும்.
10. ஒப்பந்தப்புள்ளி வழங்கும் நபர் வாழைப்பழம் மொத்த கொள்முதல் வியாபாரத்தில் குறைந்தது 3 வருட அனுபவம் இருக்க வேண்டும். வியாபாரத்தில் 3 வருடம் அனுபவத்திற்கான வியாபார கணக்குகளை பட்டய கணக்கர் (Chartered Accoutant) தணிக்கை செய்ததற்கான சான்று பெற்று அசலாக ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.
11. ஒப்பந்தப்புள்ளிதாரர் தன் பெயரில் தன் சொந்த விலாசத்தில் வாழைப்பழம் கடை வைத்து வியாபாரம் செய்வதற்கான பேரூராட்சி, நகராட்சி/ மாநகராட்சியிடம் நடப்பு காலத்திற்கான உரிமம் பெற்றதிற்கான உரிம நகல் சான்று ஒன்றினை ஒப்பந்தப்புள்ளியுடன் கட்டாயம் இணைக்க வேண்டும்.

12. டெண்டர் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையரின் அங்கீகாரத்துக்கும், ரத்து அதிகாரத்துக்கும் உட்பட்டதாகும்.
13. பஞ்சாமிர்தப் பிரிவு பொறுப்பாளர் அவ்வப்போது வழங்கும் கேட்பு சீட்டிலுள்ள விவரப்படி தேவையான காலத்தில் தேவையான அளவு தரமான தோல் உரித்த வாழைப்பழம் தங்கு தடையின்றி சப்ளை செய்ய வேண்டும். அவ்வாறு தேவைப்படும் அளவிற்கு சப்ளை செய்ய தவறினால், திருக்கோயில் நிர்வாகம் மூலம் வெளிச்சந்தையில் நேரடியாக கொள்முதல் செய்யும் போது ஏற்படும் கூடுதல் செலவீனங்கள் ஒப்பந்தப்புள்ளிதாரரிடம் வசூல் செய்யப்படும்.
14. ஒப்பந்தப்புள்ளிதாரரால் சப்ளை செய்யப்படும் தோல் உரித்த பூவன் வாழைப்பழம் நல்ல தரமானது என பொறுப்பிலான அலுவலர் திருப்தியடைந்த பிறகே அவர் முன்னிலையில் எடைபோட்டு கொடுக்க வேண்டும். வாழைப்பழம் திரட்சியற்றதாகவும், பிஞ்சாகவும் இருந்தாலும் பஞ்சாமிர்தம் தயாரிக்க

ஏற்றதாக இல்லாமல் இருந்தாலும், சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அதை நிராகரிக்க உரிமையுண்டு. இதற்கான தொகை எதுவும் கோர ஒப்பந்தக்காரருக்கு உரிமை எதுவும் இல்லை.

15. ஒப்பந்தப்புள்ளிதாரர் திருக்கோயில் தேவைக்கு உரிய பழங்களை தோலுடன் வைத்துக்கொண்டு தேவைக்கு ஏற்ப உடனுக்குடன் உரித்து தர வேண்டும். மேலும் புயல், மழை, இயற்கை சீற்றங்கள் மற்றும் பேரிடர் காரணமாக வாழைப்பழம் சப்ளையை நிறுத்தக்கூடாது. தேவைக்கேற்ப தங்கு தடையின்றி சப்ளை செய்ய வேண்டும்.
16. சப்ளை செய்யப்படும் தோல் உரித்த வாழைப்பழங்களுக்காக ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு வழங்கப்படும் பட்டியல் ஒவ்வொன்றிலும் GST , வருமான வரித்தொகை செலுத்தியதற்கான ஆதாரத்தை தாக்கல் செய்ய தவறும் பட்சத்தில் உரிய தொகை பிடித்தம் செய்து கொண்டு மீதித் தொகை வழங்கப்படும். மேற்குறித்த அரசு தொகைகளை செலுத்திய ஆதாரத்தை தாக்கல் செய்து, திரும்ப பெற்றுக் கொள்ளலாம்.
17. அரசுக்கு செலுத்த வேண்டிய வருமான வரி, GST (**CGST** மற்றும் **SGST)** வேறு ஏதேனும் வரிகள் செலுத்த வேண்டுமானால் சம்பந்தப்பட்ட துறையில் விலைப்புள்ளிதாரரே சொந்த பொறுப்பில் செலுத்திட வேண்டும். அதனால் ஏற்படும் அனைத்து விளைவுகளுக்கும் அவரே பொறுப்பாவார். இத்தொகைகளுக்கு திருக்கோயில் எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.
18. ஒப்பந்ததாரர் பட்டியலில் பிடித்தம் செய்த தொகை பசலி முடிந்தவுடன் ஒப்பந்தப்புள்ளிதாரால் திருக்கோயிலுக்கு ஏதும் இழப்பேற்பட்டதா என பரிசீலனை செய்து இழப்பேற்பட்டிருப்பின் அத்தொகையினைப் பிடித்தம் செய்து கொண்டு மீதித் தொகை இருப்பின் வழங்கப்படும்.
19. ஒப்பந்தப்புள்ளிதாரரால் சப்ளை செய்யப்பட்ட மேற்படி தோல் உரித்த வாழைப்பழம் பட்டியல் வழங்குவதில் நிர்வாக ரீதியில் ஏதேனும் காலதாமதம் ஏற்பட்டாலும், அந்தக் காலதாமதத்தைக் காரணம் காட்டாமல் தொடர்ந்து தேவைக்கேற்ப தடையின்றி வழங்க வேண்டும். 1432ம் பசலிக்கு சப்ளை செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரர் மேற்படி பசலி முடிவடைந்த பிறகு 1433.ம் பசலி டெண்டர் கோரப்பட்டு ஆணையரால் அங்கீகரிக்கப்படும் வரையில் திருக்கோயில் நிர்வாகம் கேட்கும்பட்சத்தில் இதே விலைக்கு தொடர்ந்து வாழைப்பழம் சப்ளை செய்ய வேண்டும்.
20. ஒப்பந்தப்புள்ளிதாரர் அய்யப்பப் பக்தர்கள் வருகை காலம், தைப்பூசம், சித்திரை தேர் திருவிழா போன்ற திருவிழாக் காலங்கள் மற்றும் கோடை விடுமுறை காலங்களில் பஞ்சாமிர்தப்பிரிவு பொறுப்பாளர் வழங்கும் கொள்முதல் கேட்பு சீட்டு அளவின்படி தவறாது தேவையான அளவு குறிப்பிட்ட காலத்திற்குள் வழங்க வேண்டும். மாற்று ஏற்பாடு செய்து கொள்ள திருக்கோயில் நிர்வாகத்தை கோர ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு உரிமை இல்லை.
21. டெண்டர் ஆணையரால் அங்கீகரிக்கப்படாமல் ரத்து செய்யப்படும் நிலையில் டெண்டர் டெபாசிட் தொகை திரும்ப வழங்கப்படும்.
22. டெண்டர் ஆணையரால் அங்கீகரிக்கப்பட்டவுடன் ரூ.100/–க்கான அரசு முத்திரை தாளில் திருக்கோயில் வாசகப்படி நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு முச்சலிக்கா பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.
23. முச்சலிக்கா பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்ட பின்னரே டெண்டரை ஏற்று உறுதி செய்தும், அனுமதி வழங்கப்படும்.
24. டெண்டர் டெபாசிட் செலுத்தும் நபர்கள் டெண்டர் நிபந்தனைகள் அனைத்தையும் முழுமையாக படித்து விபரம் அறிந்து கொண்ட பின்னரே டெபாசிட் செலுத்தி டெண்டரில் கலந்து கொண்டதாக கருதப்படுவார்கள்.
25. ஒப்பந்தப்புள்ளி உறையின் மேல் ‘‘–––––––––––––––––––––––––––––’’அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம் என்று குறிப்பிட வேண்டும்.

26. ஒப்பந்தப்புள்ளி அடித்தல் திருத்தல் இன்றி தொகை எண்ணாலும் மற்றும் எழுத்தாலும் தெளிவாக குறிப்பிட வேண்டும். அடித்தல், திருத்தல் உள்ள விலைப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
27. ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தப்புள்ளிதாரர் முழு முகவரியையும் மொபைல் எண்ணையும் குறிப்பிட வேண்டும்.
28. ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டு திருக்கோயிலுக்குத் தேவையான வாழைப்பழம் வெளிச்சந்தையிலோ, விலைப்புள்ளி மூலமோ அல்லது மறு டெண்டர் மூலமோ கொள்முதல் செய்யப்படும் அதனால் திருக்கோயிலுக்கு இழப்பேதும் ஏற்பட்டால் இழப்புத் தொகை முழுவதும் முதல் ஒப்பந்தப்புள்ளிதாரரே செலுத்த வேண்டும். திருக்கோயில் மூலம் பிடித்தம் செய்யப்பட்ட 10 தொகை போதுமானதாக இல்லாவிட்டால் கட்டப்பட்டுள்ள டெபாசிட் தொகையில் மீதி தொகை பிடித்தம் செய்யப்படும். மேற்கண்ட இரண்டு தொகைகளும் போதுமானதாக இல்லை எனில் சட்டப்படி நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுத்து வட்டியுடன் வசூலிக்கப்படும்.
29. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் அங்கீகாரம் வழங்கப்படும் ஒப்பந்தப்புள்ளிதாரர் செலுத்திய ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையினைத் தவிர மற்றவர்களுக்கு வைப்புத் தொகை திரும்ப வட்டியின்றி வழங்கப்படும்.
30. ஒப்பந்தப்புள்ளிதாரர் சார்பாக வேறு நபர்களை சப்ளை செய்ய அனுமதிக்கவோ அல்லது தனது ஒப்பந்தபுள்ளியை வேறு நபருக்கு மாற்றவோ அல்லது உள் ஒப்பந்தம் விடவோ கூடாது. இந்நிபந்தனைகளை மீறினால் ஒப்பந்தப்புள்ளி முன்னறிவிப்பின்றி இரத்து செய்யப்படும்.
31. ஒப்பந்தப்புள்ளிதாரர் இத்திருக்கோயில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கும், சட்ட திட்டங்களுக்கும், நடைமுறை விதிகளுக்கும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை சட்ட திட்டங்களுக்குட்பட்டு சப்ளை செய்ய வேண்டும்.
32. ஒப்பந்தப்புள்ளிதாரர் தேவைக்கேற்ப வாழைப்பழங்களை சப்ளை செய்யாவிட்டாலோ தேவைப்பட்டியல்படி வழங்காமல் குறைவாக வழங்கினாலோ அல்லது திருக்கோயில் சட்டதிட்டங்கள் மற்றும் நடைமுறை விதிகள் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை சட்டதிட்டங்களுக்கு மாறாக செயல்பட்டாலோ எவ்வித முன்னறிவிப்புமின்றி ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்படும்.
33. எவ்வித காரணமும் கூறாமல் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ இணை ஆணையர்/ செயல் அலுவலருக்கு அதிகாரமுண்டு. அதனை ஆட்சேபிக்கும் உரிமை ஒப்பந்தப்புள்ளிதாரருக்க கிடையாது.
34. 1432–ம் பசலித் தணிக்கை அறிக்கை கிடைக்கப்பெற்ற வாழைப்பழம் சப்ளை செய்த வகையில் தணிக்கைத்தடை ஏதுமில்லையென்று தெரிந்த பின்னரே ஒப்பந்தப்புள்ளிதாரரின் ஒப்பந்தப்புள்ளி வைப்பத் தொகை வட்டியின்றி திரும்ப வழங்கப்படும். திருக்கோயிலுக்கு ஏதேனும் நிதியிழப்பு ஏற்பட்டிருப்பின், அதனை பிணை வைப்புத் தொகையிலிருந்து பிடித்தம் செய்து மீதி தொகை திரும்ப வட்டியின்றி வழங்கப்படும்.
35. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பின்பற்றத் தவறினாலோ அல்லது சரிவர நிறைவேற்றத் தவறினாலோ ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.
36. ஒப்பந்ததாரரின் ஒப்பந்த காலத்தில் வரி விகிதங்களில் மாறுதல் ஏற்பட்டாலும், ஒப்பந்தப்புள்ளி தொகைக்கே ஒப்பந்தக்காலம் முடியும் வரை ஒப்பந்ததாரர் செயல்பட வேண்டும்.
37. டெண்டரை எக்காரணம் கொண்டும் வேறு எவருக்கும் எவ்விதத்திலும் மாற்றம் செய்யவும் தன்னிச்சையாக விடுபடவும், அனுமதியில்லை
38. டெண்டர் காலமான 30.06.2023–ம் தேதி பிற்பகலில் முடிவுற்றவுடன் இதன் முழு உரிமைகளும் எவ்வித முன்னறிவிப்புமின்றி, தன்னிச்சையாக திருக்கோயிலை வந்து சேரும். டெண்டர்காலம் முடிந்தவுடன் டெண்டர் குறித்து எவ்வித உரிமையும் பின்தொடர்ச்சியும் டெண்டர் எடுத்த நபருக்கு கிடையாது.

39. (கோவிட் – 19) கொரோனா வைரஸ் தடுப்பு மற்றும் பேரிடர் காரணமாக விலைப்புள்ளி திறப்பில் கலந்து கொள்பவர்கள் உடல் வெப்பநிலை பரிசோதனைக்கு உட்படுத்தியும் கண்டிப்பாக கையுறை, முகக்கவசம் அணிந்து வரவும், சமூக இடைவெளி பின்பற்றவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. தவறின் விலைப்புள்ளி திறப்பில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டாது. மேலும் அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படும் விதிமுறைகளை கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும். ஒப்பந்தம் உறுதியான பிறகு, ஒப்பந்ததாரரின் பணியாளர்கள் அரசு வழிகாட்டி நெறிமுறைகளின் படி நடக்க வேண்டும்.

நிபந்தனைகள் ஏதும் இருப்பின் டெண்டரின் போது அறிவிக்கப்படும் மற்றும் மேற்குறித்த நிபந்தனைகளில் ஏதேனும் சந்தேகம் இருந்தால் திருக்கோயில் மின்னஞ்சல் வழியாக தெரிந்து கொள்ளலாம்.

நிபந்தனைகளை https://samayapurammariamman.hrce.tn.gov.in இணையதளத்தில் திருக்கோயில் அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

**சி.** கல்யாணி, எம்.எல்.,
இணை ஆணையர்/செயல் அலுவலர்/தக்கார்